சார்பு நீதிமன்றம், செஞ்சி.

முன்னிலை திரு.எஸ்.நளினகுமார், பி.ஏ.பி.எல்.,

சார்பு நீதிபதி, செஞ்சி.

2023-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22-ஆம் நாள் செவ்வாய்கிழமை

E.P.86-2021 in ACP 11/2015

ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ்
லிமிடெட் (ராணிபேட்டை சார்பாக
அதன் அதிகாரம் வழங்கப்பட்ட நபர்
எஸ்.சாந்தகுமாரி) ... மனுதாரர்/ D.H/வாதி

.... எதிர்....

1. ஜெகன்
2. வரலட்சுமி
3. பலராமன்
4. சதீஷ்
5. அரி ..... எதிர்மனுதாரர்கள் / J.Ds / பிரதிவாதிகள்

இம்மனு 07.07.2023 ம் தேதியன்று என் முன்னர் இறுதியான விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.நீலகண்டன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.எஸ்.ஆர்.கலிமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## உத்தரவு

இம்மனுவானது, அசல் எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஜப்தி செய்யப்பட்ட வாகனத்தை திரும்ப வழங்கிட வில் குறிப்பிட்டுள்ள தொகையை வசூலிக்கும் பொருட்டு 2ம் எதிர்மனுதாரருக்கு நேட்டிஸ் அனுப்பி ஷெட்யூல் சொத்தை ஜப்தி செய்து பணம் வசூலாகாவிடில் மனு சொத்தினை நீதிமன்றம் மூலம் ஏலம் போட்டு ரூ.18,80,665.27 பை செலவுகளை எதிர்மனுதாரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள உத்தரவிட கோரியும் உ.வி.மு.ச. கட்டளை 21 விதி 22, 54, 66 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2). மனுவின் சுருக்கம்

தீர்ப்புக் கடனாளி/எதிர்மனுதாரர் கடந்த 15.03.2014 ம் தேதி மனுதாரரிடம் ரூ.9,00,000/- கடன் பெற்றார். மேற்படி தொகையை திருப்பி செலுத்தாததால், மனுதாரர் ராணிப்பேட்டையிலுள்ள இசைவு தீர்ப்பாயத்தில் மனுத்தாக்கல் செய்து, எதிர்மனுதாரர் ரூ.9,44,498/- மனுதாரருக்கு திருப்பி செலுத்த வேண்டுமென்று கடந்த 25.05.2014-ல் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது. மேற்படி தொகை மற்றும் வட்டி ஆகியவை தீர்ப்புக் கடனாளியால் செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளது. ஆகவே, மனுதாரர் மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் அசல் மற்றும் வட்டி ரூ.18,80,665.27/-ம் செலவுத்தொகையும் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்த வேண்டும். எதிர்மனுதாரர் மேற்படி தொகையை செலுத்தாததால் எதிர்மனுதாரர்களுக்கு நோட்டீஸ் அனுப்பி அவர்களுக்கு உரிமைபட்ட சொத்துக்களை ஜப்தி செய்து, அதன்பின்பு மனு சொத்தினை நீதிமன்றம் மூலம் ஏலம் விட்டு மொத்த தொகையையும் வசூலித்து தருமாறு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3). 3-ஆம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து மற்ற எதிர்மனுதாரர்களால் எற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்

மனுதாரர் மனு சட்டப்படி ஏற்புடையதல்ல. 3ம் எதிர்மனுதாரர், மனுதாரர்/வாதி நிறுவனத்தில் வீடு கட்டுவதற்காக ரூ.8,76,456/- கடந்த 17.03.2014 ல் கடனாக பெற்று வீடு கட்டினார். பிரதிவாதிகள் மேற்படி கடனை தவணை, தவணையாக ரூ.5,20,430/- வரை மேற்படி நிறுவனத்தில் செலுத்தியுள்ளார்கள். குடும்ப சூழ்நிலையில் காரணமாகவும், இயற்கையின் சீற்றத்தால் வறட்சி ஏற்பட்டு விவசாயம் பொய்த்து போனதாலும் மீதமுள்ள தொகையை செலுத்த முடியாமல் போனது. மனுதாரர்/வாதி நிறுவனத்தார், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளிடம் சமரசம் பேசி மீதமுள்ள தொகையை கட்ட வேண்டுமென்று சொன்னதன் அடிப்படையில் அவர்கள் கூறியவாறு தொகை செலுத்தி கடனை பைசல் செய்துவிட்டார்கள். மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள தொகைகள் அனைத்தும் மிகவும் அதிகமாக கணக்கிடப்பட்டுள்ளது. தீர்ப்புக்குபின் எதிர்மனுதாரர்கள் மனுதாரரிடத்தில் அவர்கள் கூறிய தொகையை கொடுத்து பைசல் செய்துவிட்டனர். இந்த எதிர்மனுதாரர்கள் பிரதிவாதிகளுக்கு சொத்துக்கள் ஏதுமில்லை. பிரதிவாதிகள் கூலி வேலை செய்து கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார்கள். எனவே மனு செலவுத்தொகையுடன் தள்ளபடி செய்ய வேண்டுமென ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4). இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5). தற்போது இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது, மனுதாரர் கூறியுள்ள காரணங்கள் ஏற்று, இந்த மனு அனுமதிக்கக்கூடியதா என்பதாகும்..

6). <u>தீர்வு</u>

இம்மனு அசல் வழக்கின் தீர்ப்பாணையின் அடிப்படையில் மனு தொகையை எதிர்மனுதாரர்களுக்கு சொந்தமான மனு சொத்தை ஏலம்விட்டு மனு தொகையை வசூலித்துத் தரவேண்டுமென்று கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7). மனுதாரர் நிறுவனத்தில் எதிர்மனுதாரர் பெற்ற கடனை திருப்பி செலுத்தாததால் ராணிப்பேட்டை இசைவு தீர்ப்பாயத்தில் மனுதாரர் மனுத்தாக்கல் செய்து, அவருக்கு ஆதரவாக தீர்ப்பாணை பெற்றுள்ளார். அந்ததீர்ப்பாணையின் அடிப்படையில், மனுதாரருக்கு செலுத்த வேண்டிய தொகையை எதிர்மனுதாரர் செலுத்தாததால் மனுவில் குறிப்பிட்டுள்ள எதிர்மனுதாரருக்கு சொந்தமான சொத்தை ஏலம் விட்டு மனு தொகையை வசூலித்து தர வேண்டுமென்று மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால், எதிர்மனுதாரர்கள் தரப்பில் தவணையாக ரூ.5,20,430/- வரை எதிர்மனுதாரர்கள் திருப்பி செலுத்தியுள்ளார்கள் என்றும், பின்னர் மனுதாரருடன் சமரசம் பேசி மீதி தொகையையும், எதிர்மனுதாரர்கள் கட்டி பைசல் செய்துவிட்டார்கள் என்றும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில், மிகவும் அதிகமாக கணக்கிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே மனுவை தள்ளுபடிசெய்ய வேண்டுமென்றும் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

8) எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபனையில், ராணிப்பேட்டை இசைவு தீர்ப்பாயத்தில் மனுதாரர் மனுத்தாக்கல் செய்து எதிர்மனுதாரர்களுக்கு

எதிராக தீர்ப்பாணை பெற்றுள்ளார் என்பது குறித்து ஆட்சேபனை ஏதும் தாக்கல் செய்யவில்லை. மேலும், மேற்படி தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு செய்து நிலுவையில் இருப்பதாகவும், கூறவில்லை. ஆகவே, மேற்படி தீர்ப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை எதிர்மனுதாரர்கள் மனுதாரர் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியவராவார்கள். ஆனால் எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனையில் இதுவரை ரூ.5,20,430/- தவணையாக மனுதாரருக்கு திருப்பி செலுத்தியுள்ளதாகவும், பின்னர் மீதி தொகை முழுவதையும் செலுத்தி பைசல் செய்துவிட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி தொகையையும்தாவா கடன் முழுவதையும் எதிர்மனுதாரர்கள் திருப்பி செலுத்திவிட்டார்கள் என்பதற்கு ஆதாரங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனவே, ஆதாரங்கள் எதுவும் இல்லாமல் மனுதாரரிடம் பெற்ற கடனை எதிர்மனுதாரர்கள் முழுவதும் திருப்பி செலுத்திவிட்டார்கள் என்றும் பொதுவாக கூறியுள்ளது ஏற்கத்தக்கதல்ல. எனவே, நிறைவேற்று மனு கடனை எதிர்மனுதாரர்கள் செலுத்திவிட்டார்கள் என்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லாததால் அவர்கள் கடனை திருப்பி செலுத்தவில்லை என்று முடிவு செய்யப்படுகிறது. மேலும், இந்நிறைவேற்ற மனு தாக்கல் செய்த பின்பும் மனுத்தொகையை எதிர்மனுதாரர்கள் திருப்பி செலுத்தவில்லை. எனவே மனுவில் குறிப்பிட்டுள்ள தொகையை மனுதாரர் பெறத்தக்கவர் என்றும், எதிர்மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள தொகையை திருப்பி செலுத்தாததால் மனுச் சொத்தை ஏலம்விட்டு மனுத்தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று முடிவு செய்யப்படுகிறது.

முடிவாக இம்மனு அனுமதிக்கப்பட்டு மனு சொத்துக்களை ஜப்தி செய்து, ஏலம்விட்டு மனு தொகையை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்படுகிறது.

என்னால் இவ்வுத்தரவு சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22-ம் நாள் அவையறியத் தீர்ப்பு பகரப்பட்டது.

S NALINAKUMAR

Digitally signed by S NALINAKUMAR
Date: 2023.08.24 22:04:32 -0800

சார்பு நீதிபதி,

செஞ்சி.